Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 13, 2024

செவ்வாய்க்கிழமை ஆகஸ்ட் 13, 2024 | ஒளி: 10 கதிர்: 027 | நகரப்பதிப்பு★ | FREE



## நீதியமைச்சர் அலி சப்ரி

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தனது அமைச்சு பொறுப்புக்கு மேலதிகமாக நீதி அமைச்சராக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, திங்கட்கிழமை (12) பதவி பிரமாணம் செய்து கொண்டுள்ளார். நீதி அமைச்சராக பதவி வகித்த விஜயதாச ராஜபக்ச, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அந்த அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தோட்டத் தொழிலாளர்களுக்கு

# ரூ. 1,700 வழங்க தீர்மானம்

தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு இருந்த நிலையில், சம்பள நிர்ணய சபையில் திங்கட்கிழமை (12) நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இறுதி தீர்வு எட்டப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு மூலம் 1700 ரூபாய் சம்பளம் வழங்க தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பள விடயம், உயர் நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லப்பட்ட நிலையில், நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட தவறுகளை திருத்தி அமைத்து 1,700 ரூபாய் சம்பளம் உயர்வு பெற்றுத்தர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



# "ஏமாற்றும் உடன்படிக்கை"

சம்பள நிர்ணய சபையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை வன்மையாக கண்டித்துள்ள அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்னன் செல்வராஜ், இது தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் சம்பள உடன்படிக்கையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் தொடர்பில் முடிவெடுப்பதற்கான கூட்டம் சம்பள நிர்ணயச் சபையில் திங்கட்கிழமை (12) கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் 10 தொழிற்சங்கங்கள், முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை உள்ளிட்ட கம்பனிகளின் 07 பிரதிநிதிகளும், அரச அதிகாரிகள் 03 பேரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கம் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான பிரேரணையை கொண்டுவந்தன.

அதாவது, அந்தப் பிரேரணையில் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளமாக 1,350 ரூபாய் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், மேலதிக கொடுப்பனவாக 350 ரூபாய் வழங்க வேண்டும் என்றும் முன் வைக்கப்பட்டிருந்தது. இதன்போது, கம்பனிகளும் தங்களது 5 கோரிக்கைகளை முன்வைத்தன.

அவர்களது முதலாவது கோரிக்கை, "தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வை கேட்டு 03 வருடங்களுக்கு போராட்டமோ அல்லது வேறு எந்த நடவடிக்கையையோ முன்னெடுக்க கூடாது." என்பதாகும். தொடர்ச்சி P2



# கம்பனிகளின் கோரிக்கை



**3 வருடங்களுக்கு கப்சிப்**
**ஒரு கிலோவுக்கு 50 ரூபாய்**
**ரூ.350க்கு கொழுந்து மட்டும்**

தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் தொடர்பில் முடிவெடுப்பதற்கான கூட்டம் சம்பள நிர்ணயச் சபையில் திங்கட்கிழமை (12) கூட்டப்பட்டது. கம்பனிகளும் தங்களது 5 கோரிக்கைகளை முன்வைத்தன. தொடர்ச்சி P2



# "சவாலை ஏற்க நாம் தயார்"

பெரும் நெருக்கடிக்குள் இருந்த ஆளும் குழுவினால் எமது நாடு அழுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கான சவாலை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று நாங்கள் இட்ட இந்த கையொப்பம் நிச்சயமாக வெற்றிக்கான கையொப்பமிடலாக அமையும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார். தொடர்ச்சி P2



தமுகூ– சஜித் பிரேமதாசவுக்கு இடையில்

# புரிந்துணர்வு கைச்சாத்து

**சஜித், மனோ, திகா, உதயா கையொப்பம்**

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கும், இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை திங்கட்கிழமை (12) கையெழுத்தானது. தொடர்ச்சி P2

## அரியநேத்திரன் சார்பில் கட்டுப்பணம்

ஜனாதிபதி தேர்தலில், தமிழ் பொதுக் கட்டமைப்பினால் சுயேட்சை வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் சார்பில் தேர்தல் ஆணைக்குழுவில் கட்டுப்பணம் திங்கட்கிழமை (12) செலுத்தப்பட்டது.



தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான, த.சிற்பரன் பொது வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை செலுத்தினார்.

## விலங்குகள், பழங்கள் தேர்தல் சின்னங்களாகின



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சின்னங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட 196 சின்னங்களில், இருபத்தி எட்டு சின்னங்கள் வெவ்வேறு விலங்குகளாகும். தொடர்ச்சி P2



## வெவெல்தெனிய விபத்தில் மூவர் பலி: மூவர் படுகாயம்

கொழும்பு-கண்டி நெடுஞ்சாலையின் வெவெல்தெனிய பகுதியில் திங்கட்கிழமை (12) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக தங்கோவிட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர்கள் கெலிஓயா பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். தொடர்ச்சி P2



## "எவருக்கும் ஆதரவளியேன்"

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அத்தனகல்ல தொகுதியில் செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் குழுவுடனான விசேட கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2



## வாக்குகளை பெற இலஞ்சம் வழங்குவதாக குற்றச்சாட்டு

வாக்குகளை பெறுவதற்காக அரசியல் பிரதிநிதிகள் சிலர் மக்களுக்கு இலஞ்சம் வழங்குவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

PAFFREL

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 84 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு இயக்கம் (பெப்ரல்) அமைப்பு தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை அதிகாரம் மற்றும் சொத்துகளை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்களென பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

திருக்கோணேஸ்வர் ஆலய விவகாரம்:

## செந்திலின் கூட்டத்தில் பதற்றம்

■ ஏ. எம்.கீத்

திருக்கோணேஸ்வரம் ஆலயம் சம்பந்தமான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாடு செய்த கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. திருக்கோணேஸ்வரம் ஆலய அபிவிருத்தி சம்பந்தமான பொது சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஞாயிற்றுக்கிழமை (11) நடத்தப்பட்டது.

கூட்டத்திற்கு வருகை தந்த திருகோணமலையைச் சேர்ந்த ஆயுள் கால உறுப்பினர்கள், வர்த்தகள், சமூகநலன் விரும்பிகள், திருக்கோணேஸ்வர கோவிலின் எதிர்கால வளர்ச்சி திட்டங்கள்குறித்தும் சமீபத்தில் திருடப்பட்ட அம்மன் தாலி பற்றியும் கலந்துரையாடினர். தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ரூ. 1,700 வழங்க தீர்மானம்

இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளத்தை முன்மொழிந்தது போல அதனை மக்கள் கை பெற்றுக்கொடுக்கும் முழுப்பொறுப்பும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு உள்ளது எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 கொடுப்பனவு இன்று முதல் வழங்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி லோரிஸ் பத்துமவில் திங்கட்கிழமை (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரம் தொடர்பாக, மூன்று வருடங்கள் பேச்சு வார்த்தைகள், விவாதங்கள் நடந்தன. நீதிமன்றம் சென்றோம். தொழிலாளர் அலுவலக தொழிலாளர் ஆணையர் தலைமையில் கலந்தாய்வு நடைபெற்றது. எமது கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்றார்.

# “ஏமாற்றும் உடன்படிக்கை

இரண்டாவது, “1 கிலோ கிராம் கொழுந்துக்கு 50 ரூபாய் கொடுக்கப்படும்.” என்பதாகும்.

மூன்றாவதாக, ”மேலதிக கொடுப்பனவு 350 ரூபாவாகும். ஆகவே, அந்த 350 ரூபாவுக்கான கொழுந்தை மாத்திரம் தான் பறிக்க வேண்டும்” என்பதாகும்.

இதுகுறித்து காரசாரமான வாத விவாதங்கள் நடைபெற்றது. 1,350 ரூபாவுக்கு ஆதரவாக 11 பேரும் எதிராக 03 பேரும் வாக்களித்தோம்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பெருந்தோட்ட தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கமாகிய நாங்கள் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். செங்கொடிச் சங்கத்தின் சார்பாக 02 பேர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஆகவே, மேலதிகமான 8 வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சாதகமாக செயல்பட்ட தொழிற்சங்கங்களும் கம்பனிகளும் அரச அதிகாரிகளும் தோட்டத் தொழிலாளர்ளை ஏமாற்றியுள்ளதுடன், அவர்களது போராட்டங்களையும், உரிமைகளையும் காட்டிக் கொடுத்துள்ளனர். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.



# “சவாலை ஏற்க நாம் தயார்”

ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனுவில் அவர், திங்கட்கிழமை (12) கையொப்பமிட்டார். இந்த வைபவம், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சவால்களை ஏற்க நாம் தயாராகவே இருக்கின்றோம். ஏனென்றால், இப்பொழுது ஏனைய பாசறைகள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து, சிதைந்து அழுக்குகளை சேகரிக்கும் நிலைக்கு மாறியுள்ளது. தேசிய மக்கள் சக்தியாகிய நாம் ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே எமது பயணத்தை சரியாக ஆரம்பித்தோம் என்றார்.

நாங்கள் மிகவும் பலம்பொருந்திய வகையிலும் ஒழுங்கமைந்த வகையிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டி இற்றைவரை இந்தப் பயணத்தை தொடர்ந்துகொண்டிருக்கின்றோம். இன்னும் எங்களுக்கு ஒரு மாதத்தை விட சற்று அதிகமான நாட்கள்தான் இருக்கின்றன. இந்தக் கொஞ்ச நாட்களில் நாங்கள் மிகவும் பலம்பொருந்திய வகையில் எமது தேர்தல் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கிராமங்களில் மிகவும் வலிமைமிக்க ஒரு ஒழுங்கமைப்பும் அதைப்போலவே, தேசிய மக்கள் சக்திக்கு சொந்தமான பலம்பொருந்திய குழுக்களும் இருக்கின்றன. எனவே, இந்த தேர்தலை நிச்சயமாக எங்களால் வெற்றிகொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்த தேர்தலுக்கப் பின்னர் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான சவாலையும், எமது நாட்டை வளமான நாடாக மாற்றுவதற்கான சவாலையும், மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உரித்தாக்கிக் கொடுப்பதற்கான சவாலையும் தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று இட்ட இந்தக் கையொப்பம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகரமான கையொப்பமிடலாக அமையும் என்பது நிச்சயமாகும் என்றார்.

# கம்பனிகளின் கோரிக்கை

1) “தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வை கேட்டு 03 வருடங்களுக்கு போராட்டமோ அல்லது வேறு எந்த நடவடிக்கையையோ முன்னெடுக்கக் கூடாது.” என்பது முதலாவது கோரிக்கையாகும்.

2) “ஒரு கிலோ கிராம் கொழுந்துக்கு 50 ரூபாய் கொடுக்கப்படும்.” என்பது இரண்டாவது கோரிக்கையாகும்.

3) ”மேலதிக கொடுப்பனவு 350 ரூபாவாகும். ஆகவே, அந்த 350 ரூபாவுக்கான கொழுந்தை மாத்திரம் தான் பறிக்க வேண்டும்” என்பது மூன்றாவது கோரிக்கையாகும்.

இதுகுறித்து காரசாரமான வாதவிவாதங்கள் நடைபெற்றன. 1,350 ரூபாவுக்கு ஆதரவாக 11 பேரும் எதிராக 03 பேரும் வாக்களிக்கப்பட்டது.

# “எவருக்கும் ஆதரவளியேன்”

நிட்டம்புவ ஹொரகொல்ல பண்டாரநாயக்க ஞாபகார்த்த நூலக வளாகத்தின் முதல் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அத்தனகல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களை அழைத்து தமது நிலைப்பாட்டை திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளிப்படுத்தியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்குமாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அங்கு கருத்து தெரிவித்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தான் எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும், அத்தனகல்ல பிரதேசத்தில் செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில் தனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் கருத்துத் தெரிவித்த திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பழைய உறுப்பினர் எனவும் கட்சியின் ஆதரவாளர் எனவும் தெரிவித்துள்ளார்.

# விலங்குகள், பழங்கள் தேர்தல் சின்னங்களாகின



கொக்லேட், பாண், கேக், டோஃபி, திராட்சை கொத்து, பழக்கூடை, கேரட், ஐஸ்கிரீம், சோளம், வட்டக்காய், முந்திரி பருப்பு, ஆப்பிள் பழம், பலாப்பழம், மாம்பழம், ஜம்பு பழம், அன்னாசி பழம், தேங்காய் போன்றவையும் சின்னங்களும் உள்ளனர்.

இது தவிர கோப்பு (பைல்), பறவை இறகு, சிசி டிவி கேமரா, இடுப்பு பெல்ட், கேஸ் சிலிண்டர், ஊஞ்சல், கெட்டபோல், குதிரை லாடம், கையடக்க தொலைபேசி போன்ற சிறப்பு சின்னங்களும் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல்

வாக்குச்சீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

# வெவெல்தெனிய விபத்தில் மூவர் பலி: மூவர் படுகாயம்

நிட்டபுவவிலிருந்து கண்டி நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சாரதியின் தூக்க கலக்கத்திலோ அல்லது வீதி மிகவும் தெளிவாக இருக்கும் போது கவனக்குறைவாக செயற்பட்டதாலோ இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மூவரில் ஒருவர் வரக்கா பொல ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இருவரும் பொது வார்டில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தங்கோவிட்ட பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# வாக்குகளை பெற இலஞ்சம் வழங்குவதாக குற்றச்சாட்டு

பொருளாதார நெருக்கடி நிலவும் இந்தக் காலக்கட்டத்திலும் பிளாஸ்ட்டிக் கதிரைகள், கோழிக்குஞ்சுகள் , பாடசாலை உபகரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். தேர்தலை நோக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இது குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறியதாக இதுவரை 44 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரவித்துள்ளார்.

தேர்தல் இலஞ்சமாக பல்வேறு பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுவதாக கடந்த 09 ஆம் திகதியிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதனிடையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவில் 09 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. தேர்தல் சட்டங்களை மீறியதாக 04 முறைப்பாடுகளும் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 05 முறைப்பாடுகளும் தமக்கு கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று வரை நாடளாவிய ரீதியில் தேர்தல் சட்டங்களை மீறிய 320 செயற்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவற்றில் 103 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்திலும் 214 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திலும் பதிவாகியுள்ளன.

# புரிந்துணர்வு கைச்சாத்து



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில், சஜித் பிரேமதாசவுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் திகாம்பரம், எம்பி உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்பிகள் ராதாகிருஷ்ணன், வேலுகுமார் ஆகியோர் வேறு பணி நிமித்தம் கலந்து கொள்ளவில்லை. மலையக தொழிற்சங்க முன்னணி செயலாளர் புஷ்பா, ஜனநாயக மக்கள் முன்னணி பிரசார செயலாளர், கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பால சுரேஷ் குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கருத்து கூறியாதாவது,

மலையக தமிழ் மக்கள் நலன் சார்ந்த, இத்தகைய ஒரு பரந்து பட்ட ஒப்பந்தம், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருடன் இதுவரை இந்நாட்டில் செய்யப்படவில்லை. நாம் எதிர்நோக்கும், அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார சவால்களை ஆவணமாக தொகுத்து நாம் ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையாக செய்து முடித்துள்ளோம். ஆகவே, இந்த நிகழ்வு இந்திய வம்சாவளி மலையக இலங்கையர் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க நடப்பாக பதிவாகின்றது.

ஏழு அத்தியாயங்கள், நாற்பத்தி எட்டு அம்சங்களை கொண்ட இந்த பல்நோக்கு உடன்படிக்கை, “மலையக சாசனம்” (Malaiyaha Charter) என்றும், “மலையக சமூகத்துனான ஒப்பந்தம்” (Social Contract ith Malaiyaha Community) என்றும் கூற படுகிறது என சஜித் பிரேமதாசவும், நானும், திகாம்பரமும் நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டோம். இந்த ஆவணம் விரைவில் பொது பார்வைக்காக வெளியிட படும்.

கல்வி, தொழில் பயிற்சி, இளைஞர் முன்னேற்றம், சுகாதாரம், போஷாக்கு, வாழ்வாதார காணி, தொழில் வாய்ப்பு, வீடமைப்பு காணி, அரச பொது நிர்வாக கட்டமைப்புக்குள் மலையகம், ஆட்சி உரிமையில் பங்கு ஆகிய தலைப்புகளின் கீழ் பல்வேறு விடயங்களை இந்த ஆவணம் புரிந்துணர்வு உடன்படிக்கையாக கவனம் செலுத்தி உள்ளது.

அதேவேளை, நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தொழில் நோக்கில், கொழும்பு உட்பட மாநகரங்களில் குடிபெயர்ந்து நிரந்தரமாக வாழும் மக்கள் எதிர்நோக்கும் வீட்டு வசதி, கல்வி வாய்ப்பு போன்ற விசேட பிரச்சினைகளை பற்றியும் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கவனம் செலுத்துகின்றது.

# செந்திலின் கூட்டத்தில் பதற்றம்

திருக்கோணேஸ்வர கோவில் தொடர்பில் ஆறுக்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. அந்த வழக்குகளுடன் தொடர்புடைய இரு தரப்பினரும் கூட்டத்துக்கு தரப்பினரும் சமூகமளித்திருந்தனர். அங்கு வந்திருந்தவர்களில் பலர், இந்த கூட்டத்தை திசைதிருப்பும் வகையில் கேள்விகளை எழுப்பினர்.

01. நீதிமன்றத்தால் நிர்வாக சபையிடம் கோவிலை கடந்த 2009 ம் ஆண்டு ஒப்படைக்கும் போது இப்படியான சோழர் காலத்து நகை என்ற ஒன்று இருக்கவில்லை என்றனர். அதற்கு பதிலளித்த ஆளுநர், நகைகள் தொடர்பில் எம்மால் ஒரு தீர்மானத்தை எட்டமுடியாது. தொல்லியல் திணைக்களமே ஆராய்ந்து சான்றழிக்கவேண்டும் என்றார்.

02. ஆலயம் தொடர்பான வழக்கொன்று குடியியல் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் போது எழுத்து மூலம் எந்த அறிவித்தலும் இல்லாமல் இப்படி சட்டத்திற்கு முரணாக அவசர கூட்டத்தை கூட்ட வேண்டிய தேவை என்ன? என்று வினவப்பட்ட போது,

இது அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட கோயில் அரசாங்க சட்டப்படி கோயில் நகைகளை கொள்ளையடிக்கப்பட்டபோது, அது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும்., பகல்கொள்ளையில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் இதேபோதே 16 பவுன் நகைகள் காணாமல் போயுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையில், நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்நிலையில், கோவிலின் நகைகள் தொடர்பில், ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்த தரப்பினருக்கும், ஏனைய தரப்பினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்ற இந்த வாக்குவாதத்தை சமரசம் செய்துவைத்த ஆளுநர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

# அரிசியில் உறைந்த ஆபத்துகள் அதிகம்

■ பு.கஜிந்தன்

சீனா அரிசியில் மறைந்திருக்கும் அரசியலைவிட அதில் உறைந்திருக்கும் ஆபத்துகள் அதிகம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார். இலங்கைக்கு சீனா நன்கொடையாக வழங்கி வருகின்ற அரிசி குறித்து பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே 1952ஆம் ஆண்டு இறப்பர்-அரிசி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதற்கு அமைவாக, இலங்கை சீனாவுக்கு இறப்பரை வழங்குவதற்கு பதிலாக அங்கிருந்து அரிசி இறக்குமதி செய்து வந்துள்ளது.

இலங்கையில் 1952ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார சரிவு இறப்பர்-அரிசி உடன்பாட்டுக்கு வழி சமைத்ததைப்போன்ற தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி சீனாவில் இருந்து அவ்வப்போது நன்கொடையாக அரிசியைக் கையேந்துவதற்கு வழிகோலியுள்ளது. இந் நன்கொடையில் மனிதாபிமானத்தை விட பிராந்திய அரசியல் மேலோங்கி இருப்பது வெளிப்படையானது.

உலகில் அதிகளவில் அரிசி உற்பத்தி செய்யும் நாடாகவும் அதிகளவில் அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடாகவும் சீனா முதலிடத்தில் உள்ளது. ஆனால், அண்மைக் காலத்தில் ஆய்வுகளின் முடிவுகள் சீனாவின் அரிசியில் சூழல் மாசு காரணமாக காட்மியம் அங்கீகரிக்கப்பட்ட அளவை விடவும் பன்மடங்கு அதிகமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. காட்மியம் உடலுக்கு அத்தியாவசியம் இல்லாத ஆபத்தான ஒரு பார உலோகம்.



உணவின் மூலம் உடலில் நுழைந்து நீண்ட காலம் தேங்கியிருக்கக்கூடிய காட்மியம் சிறுநீரகங்களை செயலிழக்க வைப்பது, மார்பு, நுரையீரல், சதயம், சிறுநீரகம் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், சீனாவில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் தரப்பரிசோதனை செய்யப்படாத அரிசி நுகர்வது குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

சீனா பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் மாத்திரம் நோக்கமாகக் கொண்டிருப்பின் தனது சந்தேகத்திற்கு இடமான அரிசி இலங்கையில் விநியோகிப்பதை நிறுத்தி இலங்கையிலேயே அதனைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதே சாலச் சிறந்தது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# இளைஞர் மாநாடு

■ க. அகரன்

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இளைஞர்களை ஒன்று திரட்டிய இளைஞர் மாநாடு, சர்வதேச இளைஞர் தினமான திங்கட்கிழமை(12) வவுனியாவில் நடைபெற்றது.

"நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதற்கான செயற்திட்டம்" எனும் கருப்பொருளில் குறித்த மாநாடு இடம்பெற்றது.

அமெரிக்க மக்களின் நிதி உதவி நிறுவனமான யு.எஸ் எயிட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்போடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் வவுனியா பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது. இதில், இலங்கையில் உள்ள 17 பல்கலைக்கழகங்கள், இரண்டு வளாகங்களில் இருந்து மாணவர்கள் பங்கேற்றனர்.











# சிறுவனை கடத்திய நால்வர் கைது

எம்பிலிபிட்டிய பல்லேகம பிரதேசத்தில் 16 வயதுடைய சிறுவனை காரில் கடத்திச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள் சகோதரர்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் ஹோமாகம மற்றும் மீகொட பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றுவர்கள் ஆவார்.

எம்பிலிப்பிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த காரை எம்பிலிப்பிட்டிய நோனாகம வீதியில் நிறுத்தி சோதனையிட்ட போது நான்கு நபர்கள் மற்றும் கடத்தப்பட்ட சிறுவன் இருந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மற்றைய இரு சந்தேகநபர்கள் பரகடுவ மென்னாரபிட்டிய மற்றும் பப்பேரிய பிரதேசங்களை சேர்ந்த 29 மற்றும் 31 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

# தேன் எடுக்க சென்றவர் யானை தாக்கி மரணம்



■ சுமணசிறி குணதிலக்க

உடவலவ காப்புக்காட்டில் தேன் எடுக்கச் சென்ற நால்வரில் ஒருவரான எம்பிலிபிட்டிய, எல்வல பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய சமரகோன் விஜேசிங்கலாகே ஜினதாச என்ற விவசாயி காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (10) இடம்பெற்றதாக ஹம்பேகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் உடவலவ காப்புக்காட்டில் கோமகல பகுதிக்கு சென்ற போது கல் அமுனை பிரதேசத்தில் வைத்து இவ்வாறு காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகியதாக தெரியவந்துள்ளது .

# டீசல் திருட்டு; 80 லீட்டர் மீட்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் டீசல் திருடிய கும்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ள நிலையில், திருடப்பட்ட 80 லீட்டர் டீசல் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் கடந்த 09 ஆம் திகதி இரவு தரித்து நின்ற ரயில்களை , அதிகாரிகள் கண்காணித்த போது ,திருட்டு கும்பல் ஒன்று ரயில் இயந்திரத்தில் இருந்து டீசல் திருடிக்கொண்டிருப்பதை கண்ணுற்று அவர்களை பிடிக்க முற்பட்ட போது அவர்கள் தப்பி சென்றுள்ளனர்.

இதன் போது அவர்கள் கொண்டு வந்திருந்த 20 லீட்டர் கொள்வனவு உடைய 04 கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்ட நிலையில் அதை கைவிட்டு தப்பி சென்றிருந்தனர்.

அவற்றை மீட்ட அதிகாரிகள் , சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மனக் கணிதப் போட்டியில்
# மாணவர்கள் சாதனை

யூசி மாஸ் ( UCMAS) மனக் கணிதப் போட்டியில் மன்னார் UCMAS கல்வி நிலையத்திலிருந்து பங்கு பற்றிய மாணவர்கள் சாதனை படைத்து வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுள்ளனர்.

இந்த போட்டி, கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் சனிக்கிழமை (10) நடைபெற்றது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் வின்சன்ட் செஷான் ஜெத்னியேல் (Vincent Sheshan Jethniel ) Listening மற்றும் visual ஆகிய இரு பிரிவுகளிலும் (கிராண்ட் சாம்பியன்)Grand Champion, சாம்பியன் (Champion) வெற்றிக் கிண்ணங்களை பெற்றுள்ளார்.

லசால் ஆங்கிலப் பாடசாலை மாணவி யக்கேயு றெறா ஜெசாறி (Jakkeu Tera Jesarey) சாம்பியன் (Champion) வெற்றிக் கிண்ணத்தையும்,

தோட்டவெளி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி ராஜநாயகம் ரியானா (Rajanayagam Tiyana), கிராண்ட் சாம்பியன் (Grand Champion) வெற்றிக் கிண்ணத்தையும் வென்று சாதனை





படைத்துள்ளனர்.மேலும் 34 மாணவர்கள் வெற்றிக் கிண்ணங்களை வென்றுள்ளார்கள்.



# நால்வரை குளவிகள் பதம் பார்த்தன

■ துவாரகஷான்

தலவாக்கலை வட்டகொடை கீழ் பிரிவு தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது திங்கட்கிழமை (12) குளவி கொட்டியதில் பாதிக்கப்பட்ட நான்கு பேர் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குளவி கொட்டுக்கு இலக்காகிய நான்கு பெண் தொழிலாளர்களும் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உடனடியாக தோட்ட நிர்வாகம் இனங்கண்டு அதற்கான தீர்வினை வழங்க வேண்டும் என தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ரயிலில் மோதி ஒருவர் பலி




கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலில் பிலிமத்தலாவ-பெனிதெனிய ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (11) இரவு ரயில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவர் 35 மதிக்கத்தக்க 06 அடி உயரம் கொண்ட ஊதா நிற கால்சட்ட மற்றும் சாம்பல் நிற டீ ஷர்ட் அணிந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், உயிரிழந்தவரின் சடலம் பேராதனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உதய சூரியன், தங்கம் வெள்ளி வழங்கி கௌரவிப்பு

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிடேகி Mizukoshi Hideaki, ஜப்பான் இலங்கை தொழில்நுட்ப மற்றும் கலாச்சார சங்கத்தின் (JASTECA) முன்னாள் தலைவர் அதுல்ல எதிரிசிங்கவுக்கு "உதய சூரியன், தங்கம் மற்றும் வெள்ளிக் கதிர்களின் ஒழுங்கு" The Order of the Rising Sun, Gold and Silver Rays" வழங்கி கௌரவித்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு மற்றும் பரஸ்பர புரிதல் மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை மேம்படுத்துவதில் அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், கொழும்பில் உள்ள ஜப்பானிய உணவகமான "குராகு" இன் உரிமையாளர்/இயக்குனர் ஆவார்.

இலங்கையில் 5S மற்றும் Kaizen போன்ற ஜப்பானிய பாணி மேலாண்மை அமைப்புகளை மேம்படுத்துவதில் எதிரிசிங்கவின் இடைவிடாத முயற்சிகளுக்காக தூதுவர் MIZUKOSHI பாராட்டினார். JASTECA இன் நீண்டகால அர்ப்பணிப்புள்ள உறுப்பினராக, குறிப்பாக அவர் தலைவராக இருந்த காலத்தில், இலங்கையின் பல்வேறு



தொழில்துறைகளில் இந்த நடைமுறைகளை பரவலாக ஏற்றுக்கொள்வதற்கும், உற்பத்தித்திறனை கணிசமாக மேம்படுத்துவதற்கும், நமது இரு நாடுகளுக்கு இடையே நெருக்கமான பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்கும் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு பெரிதும் பங்களித்தது. ஜப்பானிய உணவகமான "KUURAKU" இன் இணை உரிமையாளர்/இயக்குனர் என்ற வகையில் எதிரிசிங்க கலாச்சார பரிமாற்றத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளார் என்றும் தூதுவர் மிசுகொஷி MIZUKOSHI வலியுறுத்தினார். ஜப்பானிய உணவு வகைகள் மற்றும் கலாச்சாரம் இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் கொழும்பில் 'குராகு' ஒரு நேசத்துக்குரிய நிறுவனமாக மாறியுள்ளது. COVID-19 தொற்றுநோய்களின் போது அவர் மேற்கொண்ட முயற்சிகள், குறிப்பாக நாட்டின் முதல் ஜப்பானிய உணவு விநியோக சேவையின் அறிமுகம், வழக்கமான ஜப்பானிய உணவை அணுக ஜப்பானிய சமூகத்தை ஆதரித்து விலைமதிப்பற்ற சேவையை வழங்கியது

ஜப்பானுடனான நட்புறவை மேம்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை வழங்கிய வெளிநாட்டினருக்கு ஜப்பானின் பேரரசர் The Order of the Rising Sun "தி ஆர்டர் ஆஃப் தி ரைசிங் சன்" வழங்கப்படுகிறது. இந்த நிகழ்வு ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேலும் மேம்படுத்தும் என நம்பப்படுகிறது.

# பெண் படுகொலை

மதுரங்குளிய நல்லந்தலுவ பிரதேசத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான வயோதிப பெண்ணொருவர் திங்கட்கிழமை (12) தனது வீட்டினுள் கை, கால் கட்டப்பட்டு, நிர்வாணமாக கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

மதுரங்குளிய , நல்லந்தலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய செல்வமரிக்கார் ஜனா உம்மா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தனக்குச் சொந்தமான தென்னந்தோப்பு காணியில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாகவும் அவரின் பிள்ளைகள் எப்போதாவது ஒரு நாள் வந்து தாயை பார்த்து செல்வதாகவும்




தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் உடலின் வெளிப்புறத்தில் வெட்டுக்கள் அல்லது வேறு காயங்கள் காணப்படவில்லை எனவும் அவரிடம் அதிக அளவு பணம் இருந்திருக்கலாம் எனவும், அவரிடம் இருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மூடி மறைக்கப்பட்ட கூட்டு பாலியல் வன்புணர்வு

பலாத்காரம் என்பது மனிதர்கள் செய்யும் மிக மோசமான சட்டவிரோத பாலியல் செயல். சில சமயங்களில் ஆண்ணொருவர் ஆணை, பெண்ணொருவர் ஆணை, பெண்ணொருவர் பெண்ணைப் பலாத்காரம் செய்யலாம். எனவே கற்பழிப்பு என்பது ஒருவருடன் சம்மதம் இல்லாமல் உடலுறவு கொள்வது என வரையறுக்கப்படுகிறது. பெண்கள் பெரும்பாலும் ஆண்களால் பலாத்காரம் செய்யப்படுகின்றனர்.

2004 டிசெம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமி பேரிடரில் சிக்கிய இரண்டு பெண்களை மீட்க வந்த ஆண்கள் அவ்விருவரையும் பலாத்காரம் செய்தமையே பலரின் ஞாபகத்தில் உள்ளது.

அதனைவிடவும் யுத்தக்காலத்தில் சொல்லில் அடங்காத சம்பவங்கள் இடம்பெற்றன. இந்நிலையில், பாடசாலை மாணவியொருவர் 22 மாணவர்களால் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. அது மூடி மறைக்கப்பட்டமை வேதனையானது.

ஒரு பெண்ணின் அனுமதியின்றி உடல் பலம் அல்லது மிரட்டல் அல்லது போதை மருந்து கொடுத்த பிறகு கற்பழிப்பு நிகழலாம். சில சமயங்களில் கற்பழிப்புக்கு ஆளானவர் மனநலம் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது மைனராகவோ இருக்கலாம். பலாத்காரச் சட்டங்கள் நாட்டுக்கு நாடு மாறுபடும். சில நாடுகளில் உள்ள சட்டத்தின்படி, கணவன் மனைவியின் அனுமதியின்றி உடலுறவு கொண்டால் அதுவும் கற்பழிப்புதான்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பெண் உடலில் பல்வேறு காயங்கள் ஏற்படுவதும் சாத்தியமாகும். இளம்பெண்களை ஏமாற்றும் போலிக் காதலர்கள் அடிக்கடி கற்பழிக்கப்படுகிறார்கள். மேலே குறிப்பிட்ட சம்பவமும் அவ்வாறுதான் இடம்பெற்றுள்ளன.

பெரும்பாலான கற்பழிப்பு பாதிக்கப்பட்டவர்களின் உளவியல் நிலை, பல மாதங்களுக்குப் பிறகு இயல்பு நிலைக்குத் திரும்புகிறது. மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். சிலர் மது அல்லது போதைப்பொருளுக்கு அடிமையாகலாம்.

ஒரு பெண் பலாத்காரம் செய்யப்பட்டால், அவளுக்கு மற்றவர்களிடமிருந்து ஆதரவு, அன்பு, இரக்கம் மற்றும் இரக்கம் தேவை. தகுதியான மருத்துவரிடம் உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும்.

அவளது உடல் காயங்களுக்கு சிகிச்சை அளித்தல். கர்ப்பத்தைத் தடுக்க 72 மணி நேரத்திற்குள் எடுக்க வேண்டிய குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகளைக் கொடுப்பது. பலாத்காரத்தின் விளைவாக ஒரு பெண் கர்ப்பமானால், பல நாடுகளில் கருக்கலைப்பு செய்வதற்கான சட்ட வாய்ப்புகள் உள்ளன, ஆனால் இலங்கையின் சட்டத்தில் அதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, கர்ப்பத்தைத் தடுக்க அவள் சிகிச்சை எடுத்துக்கொள்வதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அவளது அதிர்ச்சிக்கான சிகிச்சை மற்றும் ஆலோசனை. மாசுபடுத்துபவரிடமிருந்து பரவக்கூடிய பாலியல் பரவும் நோய்களுக்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை. அவளுடைய துரதிர்ஷ்டவசமான விதிக்கு சாத்தியமான சட்ட நடவடிக்கை பற்றி விவாதித்தல் அவசியமாகும். ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பிறகு, அவளை பொலிஸுக்கு அழைத்துச் சென்று சட்ட நடவடிக்கை எடுக்க அனைவரும் தூண்டப்படுவதில்லை. இதற்குக் காரணம், சட்டப் பணி செய்யச் சென்ற அவளுக்கு நேர்ந்த அவலத்தை சமுதாயம் அறியும். இது அவள் அனுபவிக்கும் அவமானத்தை அதிகரிக்கிறதே தவிர, குறையவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது துஷ்பிரயோகம் செய்தவர் சட்டத்தின் முன் விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இருண்ட மனதைப் போக்கினால்த் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புதுஉலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல்வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும்; செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்குபுரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மறு திசைக்கு நகர்கின்றதா மக்கள் காங்கிரஸ் ?

மொஹமட் பாதுஷா

அரசியல் களத்தில் எடுக்கப்படும் எந்த முடிவுகளும் நிரந்தரமானவையாக இருப்பதில்லை. 'அந்தந்த நேரத்து முடிவுகள்' என்ற விளக்கம் யாருக்குப் பொருந்தாவிட்டாலும் முஸ்லிம் அரசியல் அணிகளுக்கு சாலப்பொருந்தும்.

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகள் தமது ஆதரவு யாருக்கு என்பதை அறிவித்திருக்கின்றன.

ஆனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி இன்னும் முடிவை அறிவிக்கவில்லை.

இம்மாதம் 14ஆம் திகதி அதனை அறிவிப்பதாக கட்சித் தலைவர் றிசாட் பதியுதீன் அறிவித்துள்ளார்.

ஆயினும் போகின்ற போக்கைப் பார்த்தால், இன்னும் சில தினங்கள் தாமதமாவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

முன்னதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் எனபது முன்னர் தெட்டத் தெளிவாக அனுமானிக்கப்பட்ட விடயமாகும்.

அதற்கான காரணங்களை நாம் கடந்த வார பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். இருப்பினும், தற்போது எந்த முடிவை எடுப்பது என்பதில் ம.கா. கட்சி 'மதில்மேல் பூனையாக' இருக்கின்றது.

இந்த நாட்டை நெருக்கடியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க மீட்டார் என்று ஒரு விடயம் உள்ளது. நெருக்கடியான காலகட்டத்தில் பலரும் நாட்டுக்கு தலைமை தாங்க முன்வரவில்லை.

அதில் சஜித் பிரேமதாசவும் ஒருவர். அதற்கு அவர் பக்கத்தில் நியாயங்கள் இருக்கலாம் என்பது வேறு விடயம்.

யார் நாட்டைப் பொறுப்பேற்றிருந்தாலும் நெருக்கடி நிலை நீங்கியிருக்கும் என்பதுதான் நிதர்சனம்.

ஒருவேளை இந்த அரகலயவை உசுப்பேற்றி விட்ட வெளிநாட்டுச் சக்திகளின் நோக்கமும், ரணில் ஜனாதிபதியாக வந்தவுடன் ஓரளவுக்கு நிறைவேறியிருக்கலாம் என்பதையும் நாமறிவோம்.

இந்தப் பின்னணியிலேயே, அரகலயவுக்கு முன்பு ரணில் விக்கிரமசிங்க பற்றி இருந்த பார்வை இப்போது சற்று மாறியுள்ளது. கணிசமான மக்கள் மத்தியில் 'நாட்டை மீட்டவர்' என்ற எண்ணம் அவரை நோக்கி ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

> **Xஜனாதிபதி ரணிலிடம் பெருந்தொகை நிதி ஒதுக்கீட்டைப் பெற்று வந்து, தமது சொந்த நிதிபோல தம்முடைய பிரதேசங்களுக்கு வழங்கியுள்ளனர்.**

இவ்வாறான காரணங்களுக்காக மட்டுமன்றி,கிழக்கில் மு.கா.வின் முடிவுக்கு எதிர் முகாமிலுள்ள முஸ்லிம்களின் வாக்குகளை கையகப்படுத்துதல், வடக்கின் அரசியல் எனப் பல சாதக பாதகங்களை மக்கள் காங்கிரஸ் தலைவர் சிந்திப்பார் எனத் தெரிகின்றது.

றிசாட் பதியுதீன் கடந்த காலத்தில் எடுத்த எல்லா முடிவுகளும் நகர்வுகளும் சரி என்று சொல்வதற்கு இல்லை.

கூட்டத்தோடு கையை உயர்த்தியது, றவூப் ஹக்கீம் எடுத்த முடிவுக்குப்பின்னால் போனது என பல குளறுபடிகள் உள்ளன. முஸ்லிம் அரசியலின் பின்னடைவுக்கு காரணமான அணிகளில் மு.கா.வுக்கு அடுத்த இடத்தில் ம.கா. இருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

இருப்பினும், றிசாட் பதியுதீனுக்கு அருகில் இருந்து ஆலோசனை சொல்வதற்கு அறிவார்ந்த ஆளுமைகளின் வெற்றிடமொன்று இருப்பதாக அண்மைக்கால அவரது அரசியல் போக்குகள் குறிப்புணர்த்துகின்றன.

இவரிடம் வருபவர்கள் சமூகத்திற்கு சேவையாற்ற வருகின்றார்களா அல்லது பணம், பதவிக்காக மட்டும் வந்து இணைகின்றார்களா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

எது எப்படியோ மக்கள் காங்கிரஸ் கட்சி ஜனாபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து இப்போது மக்கள் சந்திப்புக்களை நடத்தி கருத்துக்களை அறிய முற்பட்டுள்ளது. கொழும்பில் மட்டுமன்றி வடக்கிலும் கிழக்கிலும் இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது ஒரு நல்ல முயற்சியாகும்.

முஸ்லிம் அரசியலில் மூத்த கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் கடந்த பல வருடங்களுக்குள் இப்படியான கலந்துரையாடல்களை நடத்தவில்லை. அரசியல் உயர்பீடம் கொழும்பில் ஒன்றுகூடி முடிவுகளை அறிவிப்பதும், அதன் பிறகு மக்களிடம் வந்து விளக்கம் அளிப்பதுமே வழக்கமாகும். இந்த முறையும் அதே பாணியிலேயே செயற்படுகின்றது.

அந்தக் கோணத்தில் பார்த்தால், மக்கள் காங்கிரஸ் குறைந்தபட்சம் மக்களிடம் கருத்தறிவதற்காவது நடவடிக்கை எடுத்துள்ளமை நல்ல விடயமாகும். ஆனால், இது ஒரு ஏமாற்று நாடகம் என்று கருதுவோரும் உள்ளனர்.

இது அப்படித்தான் வந்து முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒரு கட்சி நடத்துகின்ற சந்திப்புக்களுக்கு பொதுவாக ஊடகவியலாளர்களை தவிர, பெரும்பாலும் அந்த அணி சார்ந்தவர்கள்தான் வருகின்றார்கள். அவர்கள் தலைவருக்கும் அங்குள்ள அரசியல்வாதிகளும் நோகாமலேயே தமது அபிப்பிராயங்களை முன்வைக்க விரும்புகின்றனர்.

இந்த மக்கள் கருத்தறியும் நடவடிக்கை எல்லாம் பரந்த அளவில் எடுக்கப்படுவதில்லை. 'இந்தப் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட மொத்தக் கருத்துக்கணிப்பில் இந்த வேட்பாளருக்கு ஆதரிக்குமாறு இத்தனை மக்களும் அந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்று இத்தனை பேரும் கருத்துப் பதிவு செய்துள்ளதாக' தரவுகள் வெளிவரப் போவதும் இல்லை.

முஸ்லிம் கட்சி தலைவர்கள் மட்டுமன்றி அவற்றின் தளபதிகள், எம்.பி.க்களும் தமது சொந்த முடிவுகளையே மக்களின் முடிவுகளாக வெளிப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

தாம் எடுத்த சரியான அல்லது பிழையான முடிவை மக்களுக்கு நியாயப்படுத்துவதற்கு ஒரு காரணம் தேவைப்படுகின்றது. இதற்கப்பால் பெரிதாக ஒன்றுமில்லை.

அப்படியாயின், முஸ்லிம் காங்கிரஸ் முடிவை அறிவித்த பின்னர் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதைப் போல, தாம் மனதுக்குள் எடுத்துள்ள முடிவு பற்றிய களநிலைமையை அறிய மக்கள் காங்கிரஸ் முற்படுகின்றதா என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

பிரதான இரு முஸ்லிம் கட்சிகளிலும் உள்ள கணிசமான எம்.பிக்களும் அரசியல்வாதிகளும் தமது சொந்த அரசியல் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கின்றனர். அத்துடன் பலர் ஜனாதிபதி ரணிலிடம் பெருந்தொகை நிதி ஒதுக்கீட்டைப் பெற்று வந்து, தமது சொந்த நிதிபோல தம்முடைய பிரதேசங்களுக்கு வழங்கியுள்ளனர்.

சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவை மு.கா. எடுத்துள்ள நிலையில், ஒருவேளை மக்கள் காங்கிரஸ் இவ்வாரம் எந்தவொரு முடிவை எடுத்தாலும் கூட, கடைசி வரையும் அதிலுள்ள அரசியல்வாதிகள் அந்த முடிவில் நிலையாக இருப்பார்கள் என்று மக்கள் நம்பத் தேவையில்லை. அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரியத் தொடங்கிவிட்டன.

> **இந்த நாட்டை நெருக்கடியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க மீட்டார் என்று ஒரு விடயம் உள்ளது. நெருக்கடியான காலகட்டத்தில் பலரும் நாட்டுக்கு தலைமை தாங்க முன்வரவில்லை.**

ஆனால் றிசாட் பதியுதீன் - தான் ஏற்கனவே எடுத்த நிலைப்பாட்டை, அல்லது முடிவை மீள் பரிசீலனை செய்கின்றார் என்பதை மட்டும் அனுமானிக்க முடிகின்றது.

ஏனெனில், மு.காவும் ம.கா.வும் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது பெரிய விடயமல்ல. ஏனெனில் அவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து அந்தப் பக்கத்திலேயே இருக்கின்றனர். மு.கா. மற்றும் ம.கா. கட்சிகளில் தலா ஒருவரை தவிர மற்றெல்லாரும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள்தான்.

அப்படியொரு முடிவை அறிவிப்பது என்றால் அதனை மக்கள் காங்கிரஸ் தலைவர் ஏற்கனவே செய்திருக்க முடியும். நாம் கடந்த முறை ஆதரித்தவர் சஜித்தான், அவர்தான் வெற்றிபெறுவார் என கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன... என இலகுவாக விளக்கம் சொல்லியிருக்க முடியும்.

ஆனால், அப்படிச் செய்யாமல் சுற்றி வளைத்து மூக்கைத் தொடும் முயற்சியாகவே இது தெரிகின்றது.

அதாவது, சஜித்தை மட்டும் ஆதரித்தல் என்ற ஒற்றை நிலைப்பாட்டில் இருந்து, மக்கள் காங்கிரஸ் கட்சி வெளியில் வந்து, ரணிலை ஏன் ஆதரிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை,அதற்கான மக்கள் ஆதரவை தேடிக் கொண்டிருப்பதாகவே அனுமானிக்க முடிகின்றது.

## கடிதங்கள்

### சிறுபோக செய்கையில் சிக்கல்



கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கையில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு செய்கைக்கு அனுமதிக்கப்படாத நிலையில் 12 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட நீரை விட அதிகளவான நீர் வீண் விரயமாக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குளத்தின் கிழான எஞ்சிய நிலம் தரிசாக விடப்பட்ட துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தமது வாழ்வாதரத்தை இழந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் 6 ஆயிரம் ஏக்கர் நிலம் தரிசாக. விடப்பட்டதால் மாவட்டத்தின் உற்பத்தியில் பன்னீராயிரம் மெட்ரிக் தொண் நெல்லுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்று வரைக்கும் பயிர் செய்கைக்கு பயன்படுத்துகின்ற நீரின் அளவை விட அதிகளவான நீர் கழிவாய்க்கால் ஊடாகவும் தரிசு நிலங்களுடாகவும் திறந்து விடப்பட்டுள்ளன

யது பாஸ்கரன்



# சுயநலம் மிக்க மனிதர்கள்

ல.மயூரன் BA.MA.MphilR

திங்கள் தொடர்ச்சி...

விவசாய உற்பத்தியில் வெப்பநிலை அதிகரிக்கும் போது ஏற்படும் பாதிப்புகள்.

காலநிலை மாற்றத்தினால் வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது விவசாய நடவடிக்கைகள் பல்வேறு பாதிப்புகளை சந்திக்க நேரிடும். தாவரங்களின் உணவு உற்பத்தியில் சூரிய ஒளி என்பது முதன்மை காரணியாக அமைகின்றது. தாவரங்கள் பச்சையம் (Chlorophyll) எனும் கலத்தின் உதவியுடன் நீல,சிவப்பு மின்காந்த அலைகளை சூரிய ஒளியில் உறிஞ்சிக் கொள்கின்றன.

அவற்றைப் பயன்படுத்தி தமது வளர்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. பிரதேசங்களுக்கு பிரதேசம் வேறுபட்ட தன்மையில் காணப்படும் தாவரங்களின் வளர்ச்சித்தன்மை வேறுபட்ட அளவுகளில் கிடைக்கின்ற சூரியஒளியின் தன்மைக்கு ஏற்ப மாறுபடுகின்றது. தாம் வாழும் சூழலின் மீது அதிக நம்பிக்கை கொண்டவையாக காணப்படும் தாவரங்கள் சூழலுக்கு ஏற்ப உயிர்வாழ்வதற்கு பழகிக்கொள்கின்றன.

மத்தியகோட்டு பகுதியில் காணப்படும் தாவர வகைகள் நாள் ஒன்றுக்கு 6-8 மணித்தியாலங்களுக்கு சூரிய ஒளியைப் பெற்றுக் கொள்பவையாக காணப்படுகின்றது. சூரிய ஒளியின் செல்வாக்கு குறைவாக காணப்படும் பிரதேசங்களில் (மங்கலான சூரிய ஒளி கிடைக்கும் பகுதிகளில்) உள்ள தாவரங்கள் குறுகிய காலத்திலே தமக்கு தேவையான உணவினை உற்பத்தி செய்து கொள்கின்றது.

குறிப்பாக இப்பிரதேசங்களில் காணப்படும் தாவரங்களுக்கு 3-6 மணித்தியாலங்களுக்கு இடையிலான சூரிய ஒளியே கிடைக்கப்பெறுகின்றது. தங்கிவாழும் தாவரங்கள் அல்லது ஒட்டுண்ணித்தாவரங்களின் ஒளித்தொகுப்பு நேரடியாக சூரிய ஒளியுடன் சம்பந்தப்படாவிடினும் தற்போசனை தாவரங்களின் வளர்ச்சிநிலையுடன் தொடர்பு படுகின்றது.

தாவரங்களின் ஊட்டச்சத்திற்கும் வளச்சி நிலைகளுக்கும் முக்கிய காரணியாக அமைவது ஒளி ஆற்றலாகும். ஒளி ஆற்றலை பயன்படுத்தி குளுக்கோஸ் வடிவிலான இரசாயன ஆற்றலை மாற்றும் சக்தி தாவரங்களுக்கு உண்டு. தாவரங்கள் மணலில் இருந்து பெற்றக்கொள்ளும் நீரையும், வளிமண்டலத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் கார்பனீர் ஒட்சைட்டையும் இணைத்து இரசயான மாற்றத்தை ஏற்படுத்த சூரிய ஒளியை பயன்படுத்துகின்றது.



தாவரங்களின் பச்சையம் (Chlorophyll) எனும் நிறமியே தாவரங்களின் இலைகளின் நிறத்தை தீர்மானிக்கின்றன குறிப்பாக தாவர இலைகளின் நிறத்தை உருவாக்கும் தன்மை கெண்டவையாக அவை செயற்படுகின்றது.

தாவரங்களின் இலை வாயில்கள் ஊடாக ஒட்சிசன் உருவாக்கப்படுவதற்கும் சூரிய ஒளியே காரணமாக அமைகின்றது. சூரிய ஒளிகிடைக்கும் தன்மை குறைவடையும் பொழுது தாவர குளுக்கோஸ் உற்பத்தி குறைவடைவதுடன் தாவரங்களின் முழுமையான வளர்ச்சிநிலை பாதிக்கப்படும்.


சூரிய ஒளி குறை வடைந்தால் தாவர வளர்ச்சி குன்றுதல், பலவீனமான தண்டுகள், வெளிர் இலைகள், குறைவான பூக்கள், காய்களின் வாழ்நாள் குறைவடைதல் பழங்களின் உற்பத்தி குறைவடைதல் என பாதிப்பின் தன்மைகள் வேறுபடும்.

சூரிய ஒளியின் படுதல் கோணம், மற்றும் கால அளவை தாவரவளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணியாகும். தாவரங்களுக்கு கிடைக்கப்பெறும் சூரிய ஒளியின் அலை நீளம் தாவர வளர்ச்சியில் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தும். சூரிய ஒளியின் நீலஒளி தாவர வளச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றது ஆனால் சிவப்பு ஒளிக்கதிர்கள் பூத்தல் மற்றும் பழம் உருவாகுதல் செயல்பாட்டில் முக்கியம் பெறுகின்றது.

குறிப்பிட்ட பிரதேசத்துக்கான சூரிய ஒளிபடும்; காலம், அப்பிரதேசத்தின் பகல் பொழுதின் நீளம் என்பன தாவர வளர்ச்சி நிலையில் முக்கியத்துவமானவை.

அதிகப்படியான வெப்பநிலை தாவர உணவு உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்தினாலும். அவை அளவுக்கு அதிகமாக கிடைக்கப்பெறும் பொழுது தாவரத்தின் நீர் இழப்பிற்கு காரணமாக அமைந்து விடும்.

அதிக வெப்பம் இலைகளை சுறுட்டுதல் செயற்பாட்டிற்கு காரணமாகிவிடும் (rellinh and Cupping of Leaves ). இலைகளின் நீர் இழக்கப்பட்டு இலையின்



பரப்பளவு குறைவடையத் தொடங்கும்.இதனால் இலைவாயில்கள் ஈரப்பதன் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாது சுருங்கும் அல்லது மூடுகின்றது.

வெப்பமான காலப்பகுதியில் வாடும் தாவரங்கள் காலை, மாலையில் புத்துயிர் பெற்றால் அத்தாவரங்கள் வெப்ப தாக்கத்திலிருந்து தம்மை பாதுகாக்க முயற்சி செய்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. எனவே அவற்றை பாதுகாக்க நீர்ப்பாசன நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய தேவை நமக்குள்ளது.

> “ காய்களின் அடிப்பகுதி அழுகுதல் ( Blossom End Rot) ஒளிச்செயர்க்கை மற்றும் ஆவியுயிர்ப்பு வேகம் (Transpiration Speed) பழங்களின் நீர், கல்சியத்தை இலைகளுக்கு திருப்புவதன் மூலம் பழங்கள் இருண்ட நீர்கறையாகத் தோன்றும்

தாவர இலைகள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக தமது இலைகளின் நுனிப்பகுதியில் அல்லது வெளிப்புறப்பகுதியில் உலர்ந்துவிடும் தன்மையை உருவாக்கிக்கொள்கின்றது. தாவரங்கள் இலைவாயில்கள் ஊடாக ஏற்படும் நீர் இழப்பை தடுக்கும் நோக்குடன் இதனை செய்கின்றன. அவை இலைவிழிம்புகளை உலர்ந்து போக செய்தாலும் மற்றைய பகுதிகளுடாக இலையின் தொழில்பாட்டை மேற்கொள்கின்றது.

இச்செயற்பாடு பெரிய அளவிலான இலைகளைக்கொண்ட தாவரங்; களுக்கு சாதகமாக அமைந்தாலும் சிறிய இலைகளினைக் கொண்ட தாவரங்களின் செயற்பாட்டில் பாதகதன்மையை ஏற்படுத்தும். குறிப்பாக சிறிய தாவரங்களின் இலைகள் முழுமையாக செயலிழப்பிற்கு உள்ளாகிவிடும். இதனால் அத்தாவரங்கள் முழுமையாக அழிவடையும் நிலைக்கு தள்ளப்படும்.

காற்றின் தரம் குறைவாக காணப்படும் சந்தர்ப்பத்தில் அதிகமான வெப்ப அழுத்தம் ஏற்படுமாயின் ஓசோன் (03) தாக்கம் அதிகரிக்கும். தாவர இலைகளின் வாயில்கள் ஊடாக (Stmat) ஓசோன் (03) உள்நுளைந்து தாவர திசுக்களை எரிக்கின்றது.

இதனால் இலை நரம்புகள் பாதிப்படைந்து உலர்ந்து போகும். இலைகள் பழுப்பு நிறமாக மாற்றம் பெற்று இலையின் மேற்பரப்பில் புள்ளிகள் தோன்றும். இச்செயற்பாடு காய் கனிகளிலும் இடம் பெறும். தக்காளியில் பழுப்புநிறப்புள்ளி தோன்றவதும், பூசணி,வெள்ளரிக்காய் இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகுவதும் இச்செயற்;பாட்டினாலே.

பூத்தல் மற்றும் காய்த்தல் செயற்பாட்டில் பாதிப்பு, பூக்களின் பூத்தல் திறன் குறைவடைவதுடன் அவற்றின் உயிர்ப்பு காலம் குறைந்துவிடும். இதனால் பூக்கள் உதிர்ந்து விடும் தன்மை அதிகரிக்கும். பூக்கள் காய்களாக மாறுவதற்கும்,கனிகளாக மாறுவதற்கும் இடையிலான காலத்தில் வெப்பநிலை மாற்றம் ஏற்படுமாயின் அவை செயலற்ற பகுதிகளாக மாறிவிடும். காலம் தவறிய பூத்தல், காய்த்தல் மற்றும் அறுவடைக்கு தயாராதல் என காலம் தவறிய பயிர் விளைச்சல்களை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

குறிப்பாக பயிர்களின் பழங்கள் அல்லது காய்கள் நாம் எதிர்பார்பதற்கு முன்பே விதைத்தல் செயல்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கும். இதனை டீழடவin செயற்பாடு எனகுறிப்பிடப்படும் குறிப்பாக கத்தரிக்காய் , காலிஃபிளவர், பசலிக்கீரை,கீரைவகை, கொத்தமல்லி ஆகிய பயிர்களில் இதன்தாக்கத்தை அதிகமாக உணரக்கூடிய நிலையுருவாகும்.

வெப்ப அதிகரிப்பால் சூரியக்கதிரின் நேரடித்தாக்கம் காய்,கனிகளைத் தாக்கும் செயற்பாட்டினால் அவற்றின் பகுதிகள் பாதிப்புக்குள்ளாகும். பழங்களின் நிறமாற்றம், நீர்புள்ளிகள், கொப்பளங்கள், திட்டுக்கள், தோல் உலர்ந்த தன்மை போன்றன தோன்றும்.

காய்களின் அடிப்பகுதி அழுகுதல் ( Blossom End Rot) ஒளிச்செயர்க்கை மற்றும் ஆவியுயிர்ப்பு வேகம் (Transpiration Speed) பழங்களின் நீர், கல்சியத்தை இலைகளுக்கு திருப்புவதன் மூலம் பழங்கள் இருண்ட நீர்கறையாகத் தோன்றும். இத்தாக்கம் நுண்ணுயிர்கள், பங்கசுக்களால் ஏற்படுவது இல்லை. தாவர உடலியல் கோளாறு அல்லது உயிரற்ற நோய் என்ற வகைப்படுத்தலில் இத்தாக்கத்தை வகைப்படுத்திக் கொள்ளமுடியும். அதிகரித்த வெப்ப அழுத்தம் அல்லது உறைபனி செயற்பாட்டினால் இவை நிகழ்கின்றது.

இவ்வாறு புவியின் மேற்பரப்பில் ஏற்படும் வெப்ப அதிகரிப்பு அல்லது மாறுபாடு தாவர வளர்ச்சி நிலையில் பாரிய அளவிலான தாக்கத்தை செலுத்தும். அதன் விளைவு தாவர உணவுகளின் உற்பத்தி திறன் குறைவடைந்து செல்வதாகும்.

புதன் தொடரும்...



# விமலுக்கு ஜோடியாக இரண்டு நாயகி

நடிகர் விமல் நடித்த சில திரைப்படங்கள் ஓடாக நிலையில், விலங்கு என்ற வெப் தொடர் மூலம் மீண்டும் கம்பேக் தந்தார். தற்போது வெப் தொடர் மற்றும் ஒரு சில படங்களில் விமல் நடித்து வருகின்றார்.

இந்த வரிசையில் என்கிட்ட மோதாதே பட இயக்குநர் ராமு செல்லப்பா இயக்கத்தில் உருவாகி வரும் புதிய வெப் தொடரில் விமல் கதாநாயகனாக நடித்துள்ளார்.

இதில் திவ்யா துரைசாமி, பிக்பாஸ் பாவ்னி என இருவரும் கதாநாயகியாக நடிக்கின்றனர்.

படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து இப்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் இந்த வெப் தொடர் ஹாட் ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டெட்பூல் வசூல் சாதனை

பல மொழிகளில் டப் செய்யப்பட்டு வெளியான ஹொலிவுட் திரைப்படமான 'டெட்பூல் & வால்வரின்' தொடக்க வார இறுதியில் உலகெங்கிலும் 3650 கோடி ரூபாய் வசூலித்து, 2024 ஆம் ஆண்டின் நம்பர் 1 ஆரம்ப வசூல் திரைப்படமாக வரலாறு படைத்துள்ளது.

தற்பொழுது திரைப்படம் வெளியாகி இரண்டு வாரம் கடந்த நிலையில் திரைப்படம் 1 பில்லியன் அமெரிக்க டொலர் வசூலித்துள்ளது.

இந்தாண்டு வெளியாகிய மார்வல் யூனிவர்சில் இடம் பெற்றுள்ள ஸ்பைடர் மேன் நோ வே ஹோம் திரைப்படத்துக்கு அடுத்து இப்படம் வசூல் வேட்டை நடத்தியுள்ளது.

நகைச்சுவை, ஆக்ஷன் மற்றும் பல பொழுதுபோக்கு அம்சங்களுடன் வெளியான இந்தத் திரைப்படம் பார்வையாளர்களுக்குப் பிடித்த ஒன்றாக மாறியுள்ளது.

மார்வெல் ஸ்டுடியோவின் 'டெட்பூல் & வால்வரின்' ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் திரையரங்குகளில் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடைசி பட இயக்குநர்?

நடிகர் விஜய் தற்போது தி கோட் என்ற படத்தில் நடித்துள்ள நிலையில், இந்த படம் செப்டம்பர் 5 ஆம் திகதி வெளியாக இருக்கிறது.

இதனிடையே விஜய் அரசியலில் களமிறங்குவதாக அறிவித்து தமிழ வெற்றிக் கழகம் என்று தனது கட்சி பெயரையும் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

இந்த நிலையில், நடிகர் விஜய்யின் 69 படத்தை இயக்குநர் ஹெச். வினோத் இயக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளதுடன், முதற்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முந்தைய நேர்காணல்களில் பேசும் போது, விஜய் படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தால், நிச்சயம் அது அரசியல் சார்ந்த கதையாகவே இருக்கும் என்று இயக்குநர் ஹெச். வினோத் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், ஹெச். வினோத், நடிகர் விஜய் இணையும் அடுத்த படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு எப்போது வெளியாகும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எனினும், நடிகர் விஜய் தி கோட் படத்தைத் தொடர்ந்து தளபதி 69 மற்றும் தளபதி 70 என இரண்டு படங்களில் நடிப்பது கிட்டத்தட்ட உறுதியாகி உள்ளது.

தளபதி 69 படத்தை இயக்குநர் ஹெச். வினோத் இயக்குவது கிட்டத்தட்ட உறுதி என கூறப்படும் நிலையில், தளபதி 70 படத்தை இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.



# தங்கலானுக்கு சிக்கல்

இயக்குநர் பா. ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள "தங்கலான்." படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிந்து, தற்பொழுது வெளியீட்டுக்கு தயாராகியுள்ளது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் ஆக்ஸ்ட் 15 ஆம் திகதி இந்தத் திரைப்படம் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், தங்கலான் படத்தை வெளியிடும் முன் 1 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று படத்தின் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜாவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையை சேர்ந்த அர்ஜூன்லால் சுந்தர்தாஸ் என்பவரிடம் வாங்கிய கடன் தொடர்பான வழக்கில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதில், தங்கலான் படத்தை வெளியிடும் முன் 1 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் அதன் பின் படத்தை வெளியிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல், கங்குவா படத்தை வெளியிடும் முன்னரும் 1 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

மேலும் பணம் செலுத்தியது தொடர்பாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்து ஒப்புதல் பெற வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கு விசாரணையை 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

நகைச்சுவை, ஆக்ஷன் மற்றும் பல பொழுதுபோக்கு அம்சங்களுடன் வெளியான இந்தத் திரைப்படம் பார்வையாளர்களுக்குப் பிடித்த ஒன்றாக மாறியுள்ளது.

மார்வெல் ஸ்டுடியோவின் 'டெட்பூல் & வால்வரின்' ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் திரையரங்குகளில் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.





அமெரிகாவின் மீது

டாக்கா

# ஷேக் ஹசீனா குற்றச்சாட்டு

பங்களாதேசில் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றஞ்சாட்டினார்.

பங்களாதேசின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, சர்ச்சைக்குரிய இட ஒதுக்கீடு தொடர்பாக எதிர்கொண்ட சிக்கலால், கடந்த 5ஆம் திகதி தன் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில், பதவி விலகிய பின் முதல்முறையாக ஷேக் ஹசீனா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

"மார்ட்டின் தீவுகளையும் வங்காள விரிகுடாவையும் அமெரிக்காவுக்கு விட்டுக் கொடுத்திருந்தால் நான் பதவியில் நீடித்திருக்க முடியும். ஆனால் அதற்கு நான் ஒத்துழைக்கவில்லை. தற்போது அமெரிக்காவின் சதியால் ஆட்சியை இழந்துள்ளேன். ஒருபோதும் நாட்டின் இறையாண்மையை அந்நிய சக்திகளுக்கு விட்டுத்தர இயலாது. பிரதமர் பதவியில் நீடித்திருந்தால் மாணவர்கள் போராட்டம் தொடர்ந்திருக்கும். அதனால் மேலும் பலர் உயிரிழக்கக்கூடும். நாட்டின் வளங்கள் அழிக்கப்பட்டிருக்கும். எனவேதான், பதவியை இராஜினாமா செய்தேன்.

அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கொல்லப்படுவதாகவும் அவர்களின் வீடுகள் சூறையாடப்படுவதாகவும் வெளிவந்த செய்திகளைக் கேட்டு துயரடைந்தேன். கடவுளின் கருணையால் மீண்டும் வங்கதேசம் திரும்புவேன் என நம்புகிறேன். எந்த நாட்டுக்காக என் தந்தையும் குடும்பத்தினரும் உயிர்த்தியாகம் செய்தார்களோ அந்த நாட்டின் நலனுக்காக எப்போதும் பிரார்த்திக்கிறேன். போராட்ட சூழலை பயன்படுத்தி சில குழுக்கள் மக்களை திசை திருப்பினர். இதை ஒருநாள் கண்டிப்பாக உணர்வீர்கள் என நம்புகிறேன்" இவ்வாறு வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை விவகாரம்

ஒகாரா

## தங்கையை சுட்டுக்கொன்ற அண்ணன்

பாகிஸ்தானில் உள்ள ஒகாரா மாவட்டத்தில் 9ஆம் வகுப்பில் கணித பாட பரீட்சையில் சித்தியடையாததால் தங்கையை அவரது சகோதரர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இரவுநேரத்தில் தாய் உறங்கிய பின்பு பரீட்சையில் தோல்வியடைந்ததை குறித்து தங்கையிடம் அவரது அண்ணன் கேள்வி கேட்டுள்ளார்.

அதன்பின்பு அண்ணன், தங்கை இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், சத்தம் கேட்டு விழித்த தாய் தனது மகனிடம் சண்டையை நிறுத்துமாறு கோரியுள்ளார்.

ஆனால் தாயின் பேச்சை கேட்காத மகன் தனது துப்பாக்கியை எடுத்து தங்கையை சுட்டுள்ளார். பின்பு துப்பாக்கியுடன் அங்கிருந்து அவர் தப்பியோடியுள்ளார். துப்பாக்கி சூட்டால் பலத்த காயமடைந்த அப்பெண் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

இந்நிலையில், இது குறித்து பொலிஸ் நிலையத்தில் தாயார் அளித்த புகாரின் பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும், தங்கையை கொலை செய்த அண்ணனை அவர்கள் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

இந்துக்களுக்காக

வொஷிங்டன்

## அமெரிக்காவில் போராட்டம்

பங்களாதேசில் இந்துக்கள் மீதான தாக்குதலை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் போராட்டம் நடத்தினர்.

ஹூஸ்ட்டன் சுகர்லேண்ட் சிட்டி ஹாலில் நடந்த இந்த போராட்டத்தில் பலர் பங்கேற்ற நிலையில், இந்துக்களுக்கு ஆதரவாக அவர்கள் கோஷங்கள் எழுப்பியதோடு, பங்களாதேசில் சிறுபான்மை இந்துக்கள் மீதான தாக்குதலை நிறுத்தி தெற்காசியாவில் அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

கடந்த வாரத்தில் பங்களாதேசில் மாணவர்கள் போராட்டத்தால் அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா இராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். தற்போது அவரது புகலிடம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இப்போராட்டத்தில் 290க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், இந்துக்களின் வீடுகள் குறி வைத்து தாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




சமய வைபவ நெரிசலில் சிக்கி

பாட்னா

## 7 பேர் பலி



பீஹார் மாநிலம் பாட்னாவில் கோயில் கூட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் உயிரிழந்த நிலையில், 30க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

பீஹார் மாநிலம் ஜெஹனாபாத் மாவட்டத்தில் பராவர் மலைப்பகுதியில் உள்ள பாபா சித்தேஸ்வரா நாத் கோயிலில் கடந்த 11ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

குப்தர்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்த சிவன் கோயில் அப்பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதம் நிகழும் இந்த கும்பாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம்,

இந்நிலையில், நேற்றும் இந்த விழாவில் பங்கேற்க ஏராளமான பக்தர்கள் கோயிலுக்கு வந்திருந்தனர். கட்டுக்கடங்காமல் வந்த கூட்டத்தால் இன்று (திங்கள்கிழமை) அதிகாலை நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 30-க்கும் அதிகமானோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனை மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆண்டுதோறும் நிகழும் நிகழ்வு எனத் தெரிந்தும் உள்ளூர் நிர்வாகம் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யாததே உயிரிழப்பு நேர காரணம் என உயிரிழந்த நபரின் உறவினர் ஒருவர் ஊடகப் பேட்டியில் கூறினார்.

இவ்வளவு பெரிய கூட்டத்தை சமாளிக்க தேசிய சாரணர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அதிகளவில் பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் கூட்டத்தை சரியாக நிர்வகிக்கத் தவறிவிட்டனர் என்று விழாவில் கலந்து கொண்ட மேலும் சிலர் கூறினர். ஆனால் மாவட்ட நிர்வாகம் இந்தக் குற்றசாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளது.




பரிஸ் 2024: பதக்கப் பட்டியலில்

# அமெரிக்கா முதலிடம்

பிரான்ஸில் நடைபெற்று வந்த பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளானவை ஞாயிற்றுக்கிழமை (11) முடிவுக்கு வந்த நிலையில் பதக்கப் பட்டியலில் ஐக்கிய அமெரிக்கா முதலிடம் பிடித்துள்ளது.

ஐ. அமெரிக்காவும் சீனாவும் தலா 40 தங்கப் பதக்கங்களையே பெற்றபோதும் 44 வெள்ளிப் பதக்கங்களை ஐ. அமெரிக்கா பெற்றதோடு, 27 வெள்ளிப் பதக்கங்களையே சீனா பெற்றதாலேயே பதக்கப் பட்டியலில் ஐ. அமெரிக்கா முதலிடம் பெற, சீனா இரண்டாமிடத்தைப் பெற்றது.

இதேவேளை 42 வெண்கலப் பதக்கங்களோடு ஐ. அமெரிக்கா 126 பதக்கங்களை மொத்தமாகப் பெற்ற நிலையில், 24 வெண்கலப் பதக்கங்களோடு 91 பதக்கங்களை சீனா பெற்றிருந்தது.

20 தங்கம், 12 வெள்ளி, 13 வெண்கலம் உள்ளடங்கலாக 45 பதக்கங்களுடன் மூன்றாமிடத்தை ஜப்பான் பெற்றதுடன், 18 தங்கம், 19 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களுடன் 53 பதக்கங்களுடன் நான்காமிடத்தை அவுஸ்திரேலியா பெற்றிருந்ததுடன்,16 தங்கம், 26 வெள்ளி, 22 வெண்கலப் பதக்கங்களுடன் 64 பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தை பிரான்ஸ் பெற்றிருந்தது.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான டென்னிஸ்:

## சம்பியனானது சுண்டிக்குளி பெண்கள்






அஸ்ஹர் இப்றாஹிம்

வட மாகாண பாடசாலை களுக்கிடையிலான 17, 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான டென்னிஸ் போட்டியகளானவை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி டென்னிஸ் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது அக்கல்லூரி சம்பியன்களாகி தேசிய மட்ட போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றுள்ளது.

## விலகினார் றொபேர்ட்டோ




ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா, தமது அணித்தலைவர் சேர்ஜி றொபேர்ட்டோ கழகத்தை விட்டு வெளியேறியுள்ளதாக அறிவித்துள்ளது.

பார்சிலோனாவின் லா மசியா அகடமியில், தனது 14 வயதில் இணைந்த 32 வயதான றொபேர்ட்டோ 2010ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்டு 373 போட்டிகளில் விளையாடி 19 கோல்களைப் பெற்றிருந்தார்.




மேற்கிந்தியத் தீவுகள் எதிர் தென்னாபிரிக்கா முதலாவது டெஸ்ட்

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், போர்ட் ஒஃப் ஸ்பெய்னில் புதன்கிழமை (07) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (11) முடிவுக்கு வந்த முதலாவது போட்டியை வெற்றி தோல்வியின்றி தென்னாபிரிக்கா முடித்துக் கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 357/10 (துடுப்பாட்டம்: தெம்பா பவுமா 86, டொனி டி ஸொர்ஸி 78, வியான் முல்டர் ஆ.இ 41, கைல் வெரைன் 39, டேவிட் பெடிங்ஹாம் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோமெல் வொரிக்கான் 4/69, ஜேடன் சியல்ஸ் 3/67, கேமார் றோச் 2/53, ஜேஸன் ஹோல்டர் 1/39)

மே. தீவுகள்: 233/10 (துடுப்பாட்டம்: கேசி காட்டி 42, ஜேசன் ஹோல்டர் 36, ஜோமெல் வொரிக்கான் ஆ.இ 35, கிரேய்க் பிறத்வெய்ட் 35, மிகைல் லூயிஸ் 35, கவெம் ஹொட்ஜ் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 4/76, ககிஸோ றபாடா 3/56, லுங்கி என்கிடி 1/26, ஏய்டன் மார்க்ரம் 1/42)

தென்னாபிரிக்கா: 173/3 (துடுப்பாட்டம்: ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ்

புத்தளம் ஜெயா பார்ம் கால்பந்தாட்டத் தொடர்:

## அடுத்த சுற்றில் அல் அஷ்ரக்

எம்.யூ.எம். சனூன்

புத்தளத்தில் புத்தளம் கால்பந்தாட்ட லீக் தொடராக நடாத்தி வருகின்ற ஜெயா பார்ம் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஐந்தாவது போட்டி ஒன்றில் புத்தளம் அல் அஷ்ரக் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் வெள்ளிக்கிழமை (09) நடைபெற்ற ட்ரிபிள் செவன் அணியுடனான போட்டியின் வழமையான நேர முடிவில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறவில்லை.

எனவே வெற்றியைத் தீர்மானிப்பதற்காக இடம்பெற்ற பெனால்டியில் அல் அஷ்ரக் 3-2 என்ற கோல் ரீதியில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 13 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.